507 507

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस்து नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்ரம-ஹூ புரட்டாசி-மீ 18உ 1940-ஹூ அக்டோபர்-மீ 3உ | ஸ-39

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

ஓர் பண்டிதரின் மறைவு!! ம. ம. வைத்திநாத சாஸ்திரிகளவர்கள் பெங்களூரில் சென்ற வாரம் பூதவுடலை விட்டார். சாஸ்த்ரக்ஞானத்துடன் லோகானுபவமும் தன்னடக்கமும் உள்ள உத்தம புதல்வர்கள் பாரதத்தாய்க்கு வெகு சிலரே!!

நல்ல யோஜனை தான்!! த்யாகையர்வாள் [illegible] திருவையாரிலுள்ள வீட்டை வாங்கி பொது இடமாகச் செய்ய ஒருவர் யோஜனை சொன்னார். எத்தினையோ ஸங்கீத சபைகள்! கலாசாலைகள்! தோன்றியும் அவரைப் போன்ற ஒருவரை உண்டு பண்ண முடியவில்லை!!

பக்திக்கே! கச்சேரிக்கல்ல!! தியாகய்யரும் ஸதாசிவப்ரம்மேந்தரர் ஜயதேவர் போன்ற துறவிகளும் கூட ஸங்கீதத்தில் ஈடுபட்ட காரணமென்ன? அத்தகையவர் எதற்கு பாட்டை உபயோகித்தனரோ அந்த துறையில் இக்கால சங்கீத வித்வான்கள் ஈடுபடல் நலம்!!

ஜனநாயகத்தின் பலனு? தி. வெங்கடாசலம் திரும்ப தற்காலத்தவர் கையிலகப்பட்டு தத்தளிக்கிறது. அதன் பணத்தைக்கொண்டு ஸர்வகலாசாலை நடத்த முயன்று கமிட்டியின் போக்கால் தலைவரும் அதை விட்டு விலகிவிட்டார். யுத்த நிதிக்கு பணமளிக்கப்படுமாம்;

நான் தவறுவேன், ராஜாஜி தவறார். காந்திஜியின் வாயிலிருந்து சிந்திய முத்திது!! தேசத்தின் மாபெருந்தலைவர் கூற்றிது!! இது அவருக்கு நண்பரிடமுள்ள அளவு கடந்த அன்பை காட்டுவதுடன் தன்னை அளவில்லாமதிக்க இடமளிக்குமென்றுமெண்ணுகிறார

நடு நிலைமை தவறாத நீதி! புலிவலம் ஆலயப்பிரவேச விஷயத்தில் வழக்கு நடக்கும் வரை நாடார் உள்ளே நுழையக்கூடாதென நீதிபதி உத்திரவு மிகமிக கொண்டாடத்தக்கது!!

தவறு யாருடையது!! என்டோமெண்ட் போர்டார் வேண்டுமென்றே இத்தகையவர்களைக் கோவில்ட்ரஸ்டியாக நியமிக்கின்றனர்.

தெய்வ வழிபாட்டிற்கு 15000 பேர் பிரசாரகர்களை ஜப்பான் நியமித்திருக்கிறது. இதையும் சென்றவாரம் தலையங்கமான "சாசுவதமான சாந்திக்கு வழிகளென்ன" என்பதையும் நமது அரசாங்கம் கவனிக்குமா?

விபரீத சட்டம். பர்மா சட்டஸபை நிலமில்லாதாருக்கு உள்ளவரிடமிருந்து பிடுங்கிக்கொடுக்க ஓர் சட்டம் செய்திருக்கிறார்கள். அடுத்தபடி பணத்தை, அதற்கடுத்தபடி எதைப்பிடுங்கிகொடுக்குமோ? ஆஹா! ஜனநாயகமே!

சென்னையிலும்!! படையெடுப்புப்பயிற்சி விரைவில் ஆரம்பிக்கப்படுமாம்!!

ஆலயப் பிரவேசம்.

'इत:कोन्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति ।'

"மதக்கொள்கைகள் எவ்வண்ணம் சீர்குலைக்கப்பட்டால் தான் எனக்கென்ன? என் உடம்பை யாரும் வாளால் வெட்டவில்லையே!" என்றுவாளாயிருப்பவனே மூடன். அசட்டை தூக்கத்தை உதறித்தள்ளி மத விழிப்பை உண்டுபண்ணி ஆத்ம ஸ்வராஜ்யத்தில் பிரவேசிக்க மார்க்கத்தைப் புகட்டுவது ஆலயப்பிரவேச புத்தகம் ஒன்றே. பண்டிதர்களால் மிக புகழப்பெற்றது. 6-அணு ஸ்டாம்பு அனுப்பி வைத்து பிரதியை அடையமுந்துங்கள்.

கிடைக்குமிடம்:—

கண்டமங்கலம்
பால சுப்பிரமணிய அய்யர்,
10, பிலாத்தோப்பு, மைலாப்பூர், மதறாஸ்

ஸ்ரீ V. ஸோமதேவ சர்மா பிரசுரம்,

	ரூ.	அ.	ப.
சங்கரோபதேசரத்னம்.	2	0	0
பத்ம புராணம்.	0	12	0
மார்க்கண்டேய புராணம்.	0	6	0
வாமந புராணம்.	0	6	0
வைகுண்ட ஏகாதசி.	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0
ப்ரஹ்மவைவர்த்த புராணம்	0	12	0
கூர்ம புராணம்.	0	6	0
ப்ரஹ்ம புராணம்	0	12	0

கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தன பிரஸ்.

நவராத்திரியில் பாராயணார்ஹமான புத்தகங்கள்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்	4	0	0
„ மூலமும் நமாவளியும்	0	4	0
ஸ்ரீ லலிதாத்ரிசதி பாஷ்யம்	1	0	0
„ மூலமும் நமாவளியும்	0	3	0
ஸ்ரீ லலிதோபாக்யானம் தமிழ்	2	0	0
தேவி ஸ்தோத்திரங்கள் தமிழ்	0	2	0
ஆர்யா சதகம்	0	8	0
கடாக்ஷ சதகம்	0	8	0
ஸ்ரீ வித்யா ஸபர்யா வாஸனு தமிழ்	3	0	0
இங்கிலீஷ்	[illegible]	0	0
ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி ஸாகரத்தில்	2	0	[illegible]
ஸ்ரீ ராமாயண ஸுந்தரகாண்டம் தமிழ் அர்த்தத்துடன்	6	8	0
„ மற்ற காண்டங்கள்	5	0	0
ஸ்ரீ நகர விமர்சம்	0	12	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும் அசதி களைப்புச் சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஓர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினாப்பள்ளி
ஸ்தாபகர்:-
V. B. நடராஜசாஸ்திரீ,
ஆயுர்வேதாசார்ய (Regd)

திவான்பகதூர்
V. K. ராமாநுஜாசாரியார் அவர்கள் எழுதியது.

திருவாய்மொழி (3வால்யூம்)	7	8	0
கீதார்த்தசங்ரஹப் பாட்டுகள்	0	6	0
ராமாயணசாரம் பைண்ட்	1	8	0
ஷை ராப்பர்	1	4	0
சித்திர ராமாயணம் (பூஜையில் இருக்கக்கூடியது	1	0	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

மதுரையில்

ஆஸ்திக ஹிந்து ஸ்திரீ ஸம்மேளனம்.

குடந்தை ஆஸ்தீக ஸ்திரீகள் ஸங்கத்தலைவி வி. செம்பகத்தம்மாள் அக்கிராசனப் பிரசங்கம்.

ஸனாதன தர்ம சரிதத்தின் நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில் அதைக் காப்பாற்ற இங்கு கூடியுள்ள உங்களை நான் மனதார வரவேற்கிறேன். இந்த மஹா ஸம்மேளனத்தில் தலைமை வஹிப்பதை எனக்கு ஏற்பட்ட மஹத்தான புனித கைங்கரியமாக நினைக்கிறேன். ஆதலால் எனக்குள்ள அஸாமர்த்தியம், அசக்தி, இவைகளைக்கண்டு பயப்படாமல் என்னுடைய கைங்கரியத்தைச் செய்ய முற்படுகிறேன். மிகுந்த மேதாபலமுள்ள உங்களுடைய ஒத்துழைப்பும், உதவியும் கொண்டு நான் இந்த ஸேவையைப் புரிவது சிரமமல்ல. நம்முடைய எல்லா முயற்சிகளும் ஸபலமாகி இந்த ஸம்மேளனம் வெற்றி அடையவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கிறேன்.

இனி நான் அக்கிராஸனாதிபதி என்ற முறையில் நீங்கள் விவாதித்துத் தீர்மானிக்கவேண்டியதற்கு அவசியமான விஷயங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது மேல்நாட்டில் நடந்துவரும் கோரமானயுத்தத்தைப்பற்றி நாம் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறோம். இந்த யுத்தத்தில் தர்மமான காரணங்களைச் சொல்லிப் போராடிவரும் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்திற்குப் பரிபூரண வெற்றி ஏற்படவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கி[illegible]ட்டனின் வெற்றிக்கான ஸகல உதவிகளையும் செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மதுரைமா நகரைப்பற்றி நினைத்த மாத்திரத்திலேயே கடந்த ஆண்டில் நடந்த பல ஸம்பவங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. உலக சரித்திரத்திலேயே காணமுடியாத பல ஆச்சரியமான விஷயங்களும் ஞாபகத்திற்கு வருகின்றன. பிறந்து இரண்டேகால் ஆண்டிலேயே மடிந்து போன மாஜி காங்கிரஸ் மந்திரி ஸபையும், காங்கிரஸ் கூலிகளும் செய்த பெருவிளையாடல்களை நாம் ஒரு நாளும் மறக்கமாட்டோம். இந்த துரோகிகளின் நடத்தை விளைவாக அன்னை மீனாக்ஷியும் நாமும் கோயிலைப் பிரிய நேரிட்டது. இந்த மஹத்தான துக்கத்தை நாம் பொறுக்கமுடியவில்லை. அன்னையை விட்டு அலறி நிற்கும் நம்மை அன்னை கைவிடாள். வருங்காலத்தில் எனக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டு. தொடர்ந்து பலமாகக் கிளர்ச்சி செய்தால் நிச்சயமாக அன்னையை அடைந்து விடுவோம்.

சென்ற வருஷம் நடந்த ஆலயப்பிரவேச கிளர்ச்சி ஹிந்துமத சரித்திரத்தில் புதிதான அத்தியாயத்தை ஆரம்பித்துவிட்டது. அடுப்பங்கரைகளிலும், ஆலயங்களிலும், ஆற்றங்கரைகளிலும், "அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காப்பாற்றுவதெப்படி,,? என்று அனுதினமும் நாம் சிந்தனை செய்து வருகிறோம். தர்மத்தைக் காப்பாற்ற பஹிரங்கமாய் வெளி வந்து ஸம்மேளனங்களையும், ஸபைகளையும், கூட்டவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுவிட்டது. ஜனநாயக தத்துவப்படி ஒவ்வொரு ஸ்திரீக்கும் அரசியலில் பங்கு ஏற்பட்டுவிட்டதால் தர்மத்தைக்காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆகவே ஸ்திரீகள் தர்மத்தை ரக்ஷிப்பதில் ஒதுங்கி நிற்பதென்ற தத்[illegible] போய், எதிரிகளோடு தோளோடு தோளாய் நின்று போர் புரிந்து தர்மத்தைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுவிட்டது. மஹரிஷிகள் தாய்மார்களான நம்மிடமே தர்மத்தைக் காக்கும் பொறுப்பை விட்டுவிட்டார்கள்.

அதற்கிணங்கச் சென்ற ஆண்டில் நாம் நடந்து கொண்டு விட்டோம். நமது கிளர்ச்சி சிறிதுவெற்றி அளித்திருக்கிறது என்று கூடச்சொல்லலாம். மதுரை, ஸ்ரீரங்கம், திருநெல்வேலி, ராமேச்வரம், முதலிய இடங்களில் நம்முடைய ஸஹோதரிகள் தீரமாகப்போராடி இருக்கிறார்கள். அவர்களுக்கு இருந்த உத்ஸாஹத்தையும் வீரத்தன்மையையும் கண்டு உலகமே, ஆச்சரியமுற்றது! இந்த இயக்கத்தில் முக்கியப் பங்கெடுத்துக்கொண்ட ஸஹோதரிகளை! மனதார வாழ்த்துவோம். தார்மிக ஸ்திரீகள் என்ற முறையில் நம்முடைய வந்தனத்தைச் செலுத்துவோம். ஸ்ரீரங்கத்தில் கடைசியாக நடந்த ஸம்பவம் தான் காங்கிரஸ் அதிகாரத் திமிருக்குச் சாவுமணி அடித்தது. ரத்தம் சிந்தும் வரை கூடப்போராடிய பெண்மணிகளுக்கு நம்முடைய உபசார வார்த்தைகள் போதா.

சென்ற ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டபுது அத்தியாயம் எங்கு போய் முடியுமென்று தெரியவில்லை. ஆகவே சட்ட ஸபைகள், ஓட்டுரிமை, ஜனநாயகம், கக்ஷி ஆட்சி, இவை அரசியலில் இருக்கும்வரை நாம் அயர்ந்து இருக்கமுடியாது. தர்மத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணமிருந்தால், அரசியலில் பூரணமாகப் பங்கெடுத்துக்கொண்டு இயக்கத்தை நடத்திவரவேண்டும். அவ்விதமில்லாவிட்டால் ஒதுங்கி நிற்கும் நம்முடைய பலம் தர்மத்திற்குக் கிடைக்காமல் போவதோடு, தர்ம விரோதிகள் அதைப் பூரணமாகப் பயன் படுத்திக் கொள்ளவும் இடமேற்படுகிறது. ஒதுங்கி நிற்காமல் முன் வந்து கிளர்ச்சிகளைச் செய்யவேண்டும்.

இந்தியா ஸம்பந்தபட்டவரை அரசியலில் ஒரே குழப்பம் காணப்படுகிறது. ஸர்வதேசம் ஸம்பந்தப்பட்டவரை ஜனநாயகம், யதேச்சாதிகாரம், முடியாசாட்க்ஷி, எல்லாமே தத்தளித்துக்கொண்டு சவக்குழியில் விளையாடுகின்றன. காங்கிரஸ் மந்திரிசபை ராஜிநாமாவுக்குப் பிறகு அகில இந்தியா ஸமஷ்டி ஸாத்தியமானதா? கட்க்ஷி ஆக்ஷி உசிதமானது தானா? மந்திரி ஸபைகளுக்கு வரையறை இன்றி அதிகாரமளிக்கலாமா? என்பன போன்ற பல பிரச்னைகளை பற்றிச் சென்ற ஒருவருஷகாலமாக விவாதம்நடத்தி வருகிறது. இது ஸம்பந்தமாகச் சர்ச்சை செய்யாத பத்திரிகைகளோ, மஹாநாடுகளோ அறிக்கைகளோ கிடையாது. முஸ்லீம் லீக், காங்கிரஸ் கக்ஷி, ஹிந்து மஹா ஸபை, மிதவாத ஸம்மேளனம், இவை போன்ற அரசியல் கக்ஷிகள் இதில் பூர்ணமாக பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. வரவரக் குழப்பம் அதிகமாகி வருகிறது. இந்தக் குழப்பம் ஸமீபத்தில் முடிவடையப் போவதாய்த் தெரியவில்லை. வைஸ்ராய் பிரபு 1935 வருஷத்து அரசியல் சட்டத்தின் பாகம் எதையும், யுத்தம் முடிந்ததும் மாற்றத் தயாராக இருப்பதாகக் கூறியதும் குழப்பத்தை அடக்கவில்லை. அதிகப்படுத்திவிட்டது. இந்நிலையில் இந்தியாவில் பிறந்து, வாழ்ந்துவரும் பிரைஜகள் என்ற முறையில் நம்முடைய கொள்கைகளை நாம் நிச்சயித்துக் கொள்ளவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது- இந்த ஸமயம் கூடும் நாம் நம்முடைய பொறுப்பைத்தட்டிக் கழிக்கமுடியாது.

மதுரை

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

7-வது வருஷ ஸம்மேளனம்

அத்யக்ஷர் ஸ்ரீ கோகுலதாஸின் பிரசங்கம்

ஆஸ்திக சிகாமணிகளே! தார்மிக ஹிந்து சகோதர சகோதரிகளே! அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வாரஜ்ய ஸங்கத்தின் மதுரை நகர்க் கிளைச்சங்கமானது 7000 பேர்களுக்கு மேற்பட்ட ஹிந்து சகோதர சகோதரிகள் அங்கத்தினர்களாய் அதில் ஈடுபட்டுத் தொண்டு செய்யும் பெருமையுடன் மலையின்மேல் ஏற்றிய விளக்குப் போல் நம் ஹிந்து மதத்திற்கும் அதில் உண்மையான பற்றும் தொடர்பும் உடையாருக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. மதத்துறையிலும் சமூகத் தொண்டிலும் பாடுபடும் ஸ்தாபனங்கள் எதிலும் இதனினும் அதிக அங்கத்தினர்கள் உள்ள மற்றொரு ஸ்தாபனம் இந்த தேசதில் எந்த ஊரிலும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் மதுரையில் வாழ்ந்து வரும் ஹிந்து மக்களின் மதப்பற்றும் அவர்கள் மனம் கொதிக்கக் காங்கிரஸ் கக்ஷியினர் செய்த அட்டூழியங்களுமே ஆகும்.

ஹிந்து மதம் ஸனாதன தர்மம்

உலகத்தில் நின்று நிலவும் மதங்களிலெல்லாம் நம் ஹிந்துமதம் மிகப்பழமையானது. இதன் கோட்பாடுகளை வகுத்து முடிவு கட்டியிருக்கிற வேதபஞ்சாதிகள் தோன்றிய காலமும் அவைகளை முதல் முதல் வெளிப்படுத்தியவர்களும் அனுஷ்டித்தவர்களும் எந்தக் காலத்தவர் என்பதும் இன்னும் தெரியவில்லை. சரித்திர ஆராய்ச்சியாளர் இதுவரை பகுத்துணர்ந்துள்ள பழங்காலங்களின் பாகுபாடுகளும், அவைகளின் வாழ்க்கை முறைகளும், பழக்க வழக்கங்களும் பிராணிகளின் வளர்ச்சியையும் (Zoology) புல் பூண்டுகளின் வளர்ச்சியையும்(Botany) கல் மண் அவைகளின் படைகளின் தன்மைகளையும் (Strategraphy) ஆராய்ந்தறியும் நூல்களிலுள்ள விசேஷங்களையும் பூகோள சாஸ்திரத்தில் மிகப்பழமையான காலங்களில் கடலும் தரையும் மலையும் ஆறும் எங்கெல்லாம் இருந்தன என்பதையும்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)

ஸர்வதேச ஸம்பந்தப்பட்ட வரை புதுயுகத்தை ஆரம்பிக்கப்போவதாக பிரிட்டிஷ் ஸர்க்கார் சொல்லுவதால் அதையும் நாம் கவனிக்காமலிருக்கமுடியாது.

புது உலகம் எப்படி இருக்கவேண்டும்? அதில் நமக்கு விசேஷ சிரத்தை இல்லை. எப்படி இருந்தாலும் மனித ஸமூஹத்தை மிருகமாக்குகிற பாஸிஸமும், மனித ஸமூஹத்தைப் போக்கித் தறிதலைகள் தலை தூக்க உதவிபுரியும் ஜனநாயகமும் உலக அரங்க மேடையிலிருந்து அகலவேண்டும். கவலையில்லாமலும் பொறுப்பில்லாமலும் வளர்க்கப்பட்ட ஜன நாயகமானது அநேகமாகத் தன்னுடைய கடைசீ மூச்சுவிட ஆரம்பித்துவிட்டது. பிரான்ஸ் தேசத்தில் பெடயின் ஸர்க்கார் ஏற்பட்டதும், பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஜனநாயக முறையைவிட யதேச்சாதிகார முறையே உயர்ந்தது என்று கூறியதும், ஜனநாயகத்தின் சவப்பெட்டியாக ஆகிவிட்டது. ஆகவே, ஜனநாயகம் தொலைந்ததில் நாம் வருத்தப்பட இடமில்லை.

(தொடரும்.)

அத்யக்ஷகர் பிரசங்கம்
(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

Geography and Oceanography) ஆராய்ந்து மிகப் பழைய காலத்து அருமையான நிலைமைகளால் தெளியும் விஷயங்களும் எல்லாம் நம் ஹிந்துமத நூல்களில் காணும் பல காரியங்களும் நடந்ததும் அதற்கு முன் பல்லாயிரக்கணக்கான வருஷங்களான அனுஷ்டித்து வந்ததுமான ஹிந்து ஜனங்களுள் மிகப் பிற்காலத்து நாகரீகமும் பழக்க வழக்கங்களும் சரித்திரமும் ஆக இருக்கின்றன.

மத ஆராய்ச்சியாளர் பவர் இயற்றியுள்ள பல நூல்களையும் விரிவுரைகளையும் பரிசோதிப் போமானால் தெய்வ நம்பிக்கை திட்டம் முதல் தினசரி வாழ்கைத் திட்டம் வரை உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜன ஸமூகத்தாருக்கும் மஹா மேதாவிகளான சிலராலும அவரவர் தொடர்புடையவர்களாலும் பல காலங்களில் பல்வேறு திட்டங்கள் வகுக்கப் பெற்றும் கடைசியாக அவைகளெல்லாம் மறந்து உள. இவைகளுக்கெதிரில் நம் ஹிந்து மதம், அதற்கு அடிப்படையான வேதம், ஆகமம், சாஸ்திரம் இதிஹாஸபுராணங்கள் இவைகளில் தேர்ந்து தெளிந்து அறுதியுட்டுள்ள முறைகளின் படியே இன்றும் நின்று நிலவி வருகிறது, என்றும் நின்று நிலவும். ஆதலின் இதை அந்த மில்லாத மதம் என்கிறோம். இவ்விரு பான்மையிலும் நம் ஹிந்து மதத்தைத்தவிர ஆதியந்தமில்லாத தென்று சொல்லக் கூடிய மற்றொரு மதம் கிடையாது. அதனால் தான் இதற்கு மட்டில் "ஸனாதன தர்மம்" என்று பெயர்.

அதுவே வர்ணாச்ரம தர்மம்

இந்தியாவிலும் இதற்கு வெளியான பல்வேறு தேசங்களிலும் வேத சாஸ்திரங்களில் வகுக்கப்பட்ட முறையைப் பல பகுதியினரால் பலவிதமாக மேற்சொன்ன ஸனாதன தர்மம் அனுஷடிக்கப் பெறுகிறது. பிரயோகத்தில் அந்த அனுஷ்டானங்கள் பலவிதமாகத் தோன்றினாலும் ஸனாதன தர்மத்தின் அடிப்படையான கொள்கைகளே அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஆதாரமாயும் உயிர் நிலையாயும் உள்ளன. அந்தக் கொள்கைகள்:—

தெய்வம் உண்டு. ஆத்மா உண்டு. ஒரு உடலைப் பற்றி நிற்கும் ஆத்மா. இந்த ஜீவன் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும் உடல்களில் யாத்திரை செய்கிறது.

இந்தப் பிறப்பும் வாழ்வும் சாவும் இவைகள் ஒவ்வொன்றும் வினைப்பயனாலேயே தீர்மானிக்கப்பெறுகிறது.

ஒவ்வொரு ஜீவனும் தோன்றும் உடல் அதது குற்றம் குறைந்து குணம் மிகுந்து மேன்மைப்படுதற்குத் தகுந்ததாக வினைப் பயன் கூட்டி வைக்கும் விதத்தில் அமைகிறது.

பிறப்பினால் ஜாதி வர்ணம் உண்டு. அதற்குரிய கர்மாக்களை அந்தந்த ஜாதியினரும் வர்ணத்தாரும் ஒழுங்காகச் செய்ய வேண்டியது. அவ்விதம் செய்யும் முறையில் வயதின் கிரமமாகவும் செய்ய வேண்டிய வினைகளின் கிரமமாகவும் வகுத்துள்ள நிலைகள் ஆச்ரமங்கள்.

நாலு வர்ணத்தாரும் அவரவர்கேற்ற ஆச்ரமங்களில் இருந்து வாழவேண்டிய முறைகளையும் இதுபோல் மற்ற ஜாதியினருக்கு உரியவற்றையும் தாய் வயிற்றில் கருப்பந்தரித்த முதல் இறந்துபட்ட பிறகு செய்யும் ஈமக்கிரியைகள் முடிய வேத சாஸ்திரங்கள் கூறுமாதலின் மிகுதி பற்றி ஸநாதன தர்மமாகிய நம் மதத்திற்கு வர்ணாச்ரம தர்மம் என்னும் பேர் பொருந்தியதாயிற்று. இந்த ஸநாதன தர்மமும் வர்ணாச்ரம தர்மமும் இவைகளை ஒட்டி உண்டாகி இருக்கிற குலதர்மங்களும் சாச்வதம் என்பது பகவத் கீதையுடையவும் தமிழ் நூல்கள் எல்லாவற்றினுடையவும் முடிபு

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

இந்த வர்ணாச்ரம தர்மத்தை அதன் முக்கியமான கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் குறைவின்றி காப்பாற்றி வருவதும் அதின் எந்த் அம்சத்தையும் குறைகூறித் தூற்றுவோரைக் கண்டித்து உண்மை நிலையை வெளிப்படுத்துவதும் இவைகளின் பிரகாரம் ஹிந்துக்களில் ஒவ்வொரு வகுப்பினரும் நீண்ட காலமாக பின்பற்றி வரும் பழக்க வழக்கங்கள் நன்மையாகவே இருந்து வந்திருக்க, இவைகளின் சீரையும் சிறப்பையும் உணர்வதற்கு வேண்டிய கல்வியும் அறிவும் இல்லாதவர்கள் வேறு ஜனப்பகுதியார்களின் மாறுபாடான பழக்க வழக்கங்களை நம் சமூகத்தினர் பால் ஏறிட்டு இதன் சீரையும சிறப்பையும் கெடுக்க முயல்வதை தடுப்பதும் இவ்விதச் சீர்கேடுகளைச் செய்ய முயல்வோரும் அவர்களைச் சார்ந்திருப்பவரும் மிகச்சிலராகவும், உண்மையான ஸநாதன தர்மப்பற்றும் ஜாதி தர்ம, குலதர்ம நிஷ்டையும் அனுஷ்டானமும் உள்ள ஹிந்துக்கள் மற்ற எல்லாராகவும் இருக்க மேலே சொன்ன மிகச்சிலர் அரசாங்கத்துறையிலும் பொருளாதாரத்துறையிலும் மற்றத் துறைகளிலும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஸ்தானங்களையும் செல்வாக்கையும் செலுத்தி 25 கோடி தார்மிக ஸநாதன வர்ணாச்ரமிகளான ஹிந்துக்களின் குலதர்மங்கள், ஜாதி தர்மங்கள் தெய்வ வழிபாடுகள் இவைகளை கெடுக்கத் தலைப்பட்டு விட்டார்கள். ஆதலின் தார்மிக இந்துக்கள் எல்லாத்துறைகளிலும் பெரும்பாலார்கள் என்பதை இந்தப் பரதகண்டம்முழுவதும் ஊர் ஊராகவும் கிராமம் கிராமமாகவும் வர்ணாச்ரம நிஷ்டர்களின் ஸங்கங்களை ஏற்படுத்தி உலகிற்கு தெரியப்படுத்துவதும், உலக முழுவதும் ஜனநாயக இயக்கம் தாண்டவமாடும் இக்காலத்தில் ஆஸ்திக தார்மிக ஹிந்துக்களின் மதமும் அதன் கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் நிலைநிற்கவேண்டுமென்றால் அரசியல் துறையில் ஜனங்களின் பிரதிநிதிகளாகப் போற்றப்பட்டவர்களெல்லாம் இந்தப் பெரும்பாலரான தார்மிக ஹிந்துக்களின் உண்மைப் பிரதிநிதிகளாகவும் அவரவரும் உண்மையான தர்மநிஷ்டராகவும் இருக்க வேண்டுமென்பதைப் பொது ஜனங்களுக்கு உணர்த்துவதும் இதன்மூலம் இந்திய அரசியலில் இந்துக்கள் சம்பந்தமான அரசியல் திட்டங்களெல்லாம் வேத சாஸ்திரங்கள் வகுத்துள்ள வழிகளிலும் அவைகளுக்கு எவ்வித இடைஞ்சல் அன்றியும் நடைபெறும்படி சாதிப்பதும், இவைகளுக்கு இடையூறாகத் தான் தோன்றிகளான சிலர் நம் சமூக வாழ்க்கையையும் மத வழிபாடுகளையும்குலைக்கத் தக்கவையாய்ப் புகுத்தியிருக்கும் சில நிர்ப்பந்தச் சட்டங்களையும் அவசியமானால் அனுமதிச்சட்டங்களையும் கூட ஒழித்துவிட வேண்டியதும் இந்த ஸங்கத்தின் முக்கிய நோக்கங்கள். (தொடரும்.)

லலிதாத்ரிசதீ

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும் விலை ரூ. 0—3—0.
ஷி பாஷ்யம் ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக் கூடம், லிமிடெட், கும்பகோணம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

திருவோணத்திரு நன்னாட்டிருக் கொண்டாட்டம்

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் 13—9—40உ வெள்ளிக்கிழமை மாலை 6½ மணிக்கு திருவோணத்திரு நன்னாட்டிருக் கொண்டாட்டம் ஆரம்பமாகியது. ஸ்ரீ மங்கிகமாந்தமஹா தேசிகன் விசேஷ அலங்காரத்துடன் முன் மண்டபத்தில் அனைவரையும் அநுக்ரஹித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

காரியதரிசி கடவுள் வாழ்த்துப்பாட. சங்கத்தலைவர் ஸ்ரீ. ஆர். கேசவய்யங்காரவர்கள் தக்க முறையில் வரவேற்புக்கூற, பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸர். யஸ். வரதாசாரியார் தலைமை வஹித்து முன்னுரையாக ஓர் சொற்பொழிவாற்ற, ஸ்ரீ ஸ்ரீநிவாஸவேதாந்தாசாரியார் சந்தமிகுதமிழ்மறையோன் என்ற விஷயம் பற்றி விஸ்தாரமாக உபந்யஸிக்க, அவைத்தலைவர் சுருக்கமாக முற்றுரை வழங்க, காரியதரிசி தகுதியான வந்தனோபசாரம் வழங்க, முறைப்படி சாற்று மறை சாற்ற கொண்டாட்டம் இரவு 8½ மணிக்கு இனிது கலைந்தது. (ந-நி)

நாகப்பட்டினத்தில் ஸ்ரீராமச்சந்திர பட்டாபிஷேகம்.

சென்ற 12—9—40 குருவாரத்தன்று ஆரம்பம் செய்யப்பட்ட பிரம்மஸ்ரீ ... டி சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் வால்மீகிராமாயண பக்ஷாஹ பிரவசனமானது 27—9—40 குருவாரத்தன்று புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பூர்த்திஅடைந்து ஸ்ரீராமச்சந்திர பட்டாபிஷேகமானது வெகு விமரிசையாக நடைபெற்றது. விசேஷமான பாண்டித்யத்துடனும் மிகவும் சிராவ்யமான வாக்ஸௌஷ்டவமான அதிசயிக்கதகுந்த கம்பீர்யத்துடனும் எல்லோருடைய மனதையும் பரவசமாக செய்யக்கூடிய பக்தியோகத்துடனும் சாஸ்திரிகள்செய்த பிரவசனமானது வெகு சிலாகனீயமாக இருந்தது.

பிரதிதினமும் ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்மன் கோவில் டிரஸ்டி ஸ்ரீ ஈ. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களுடைய கிரஹத்தில் மூல பாராயணம் அழகாக நடத்தப்பட்ட துடன் பட்டாபிஷேக தினத்தில் சமாராதனையும் நடத்தப்பட்டது. அவரால் சாஸ்திரிகள் அவர்களுக்கு பட்டாபிஷேக சந்தர்பத்தில் விசேஷ சன்மானங்கள் செய்யபபட்டதுடன் அசேஷ மஹாஜனங்களும் சன்மானங்களும் செய்தார்கள்.

வாலியின் சம்ஹாரமானது பரமானுக்ரஹ ரீதியில் ஸ்ரீராமசந்திர மூர்த்தியால் செய்யப்பட்டதென்றும் ஸ்ரீமத்ராமாயணம் முக்யமாக சரணாகதி தத்வத்தை நிரூபணம் செய்ய வந்த கிரந்தமென்றும் சொல்லி சரணாகதி கட்டத்தில் சாஸ்திரிகள் அவர்கள் உதாஹரித்து பிரவசனம் செய்தது பக்த கோடிகளின் ஹிருதயத்திற்கு கிரதிசயமான ஆஹ்லாதத்தை உண்டுபண்ணியது.

இவ்விதம் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் முக்யமான நோக்கங்களை அவலம்பித்து நடத்தப்படும் பிரவசனங்கள் கேட்பவர்களுடைய ஹிருதயத்தில் பக்தி யோகத்தை விருத்தி செய்யுமென்பதில் எவ்வித ஆக்ஷேபணையும் இல்லை.

என். ஸாம்பசிவ அய்யர்,
வக்கீல்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-வருஷ புரட்டாசி-மீ 18உ

காந்திஜி—வைஸ்ராய் பேச்சு முறிவு

காந்தி-வைஸ்ராய் ஸந்திப்பின் முடிவைப் பற்றி உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது. ஆனால் அந்த முடிவானது விபரீதமாகி விட்டதைக் கண்டு யாவரும் ஏமாற்றமடைவர். ஸந்திப்பு பலன் தராமல் போய் விட்டதற்கு யார் மீது குற்றமென்பதை அவரவர் மனப்போக்கின்படி தீர்மானிப்பார்கள். ஆயினும் பக்ஷபாதத்தையும் கக்ஷிபபிமானத்தையும் ஆக்ரஹத்தையும் விட்டு ராஜநீதி முறையில் தீர்க்க தர்சனத்துடன் இதை விமர்சிப்போர்கள் காந்திஜியின் பிடிவாதத்தைக் கண்டு வருந்துவார்களென்றே நாம் நினைக்கிறோம். இருவர்களுடைய ஸந்திப்பு காலத்தில் நடந்துள்ள பேச்சு வார்த்தைகளைப் பற்றி வெளியாகியிருக்கும் விவரத்தைக் கவனித்தால் இது ஸுலபமாக விளங்கக் கூடியதாயிருக்கிறது.

வைஸ்ராயின் கடிதத்தைக் கவனித்தால் அவர் தமது பொறுப்பையும் கடமையையும் கவனித்து சிறிதும் ஸந்தேஹத்திற்கு இடமில்லாத தோரணையில் தெளிவாகத் தமது அபிப்ராயத்தை கூறியிருக்கிறார். ஆனால் காந்திஜியின் பதிலோ வென்றால் வழக்கப்படி சுற்றலாயும் பலவித அர்த்தம் செய்யக் கூடியதாயும் தெளிவற்றதாயும் பிடிவாதம் நிறைந்த தாகவுமிருக்கிறது.

காங்கிரஸானது சில மாதங்களாக குடியேற்ற நாட்டந்தஸ்து, சுயநிர்ணய உரிமை, பூர்ண ஸ்வாதந்திரியம், போன்ற ராஜிய ஸம்பந்தம் பெற்ற அம்சங்களை வற்புறுத்தி வந்தது. ஆயினும் பம்பாயில் திடீரென்று மேற்கண்ட ராஜீய அம்சங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு "பேச்சு ஸ்வதந்திரம்" என்ற ஓர் புதிய அம்சத்தைப் பிரதானமாக வற்புறுத்த முற்பட்டதின் காரணத்தைப் பலர் கவனித்திருக்கமாட்டார்கள். புனாவில் அஹிம்சை போன்ற காந்தீயத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டு அது காங்கிரஸிலிருந்து விலகிப் போகும் நிலைமை ஏற்பட்டது. அதை எப்படியோ மாற்றி பம்பாயில் மீண்டும் காந்தீய மதத்திற்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கை வைஸ்ராயிடம் பரீக்ஷை செய்யவே காந்திஜி முற்பட்டிருப்பதாக நினைக்க இடம் கொடுக்கிறது. தாமும், தமது வழிகாட்டுதலுக்கு உட்பட்ட காங்கிரஸும் ஒன்றாகிவிட்டதாயும், ஆதலால் தமது அஹிம்ஸைக் கொள்கையானது காங்கிரஸின் மூலாதாரக் கொள்கையாக ஸ்திரப்பட்டு விட்டதால், அதை பிரகிருதயுத்த விஷயத்தில் பிரயோகித்து பரீக்ஷை செய்யவுமே காந்திஜீ ஆர்பாட்டம் செய்கிறார். ஆகவே ராஜீய சம்பந்தம் சிறிதுமில்லாத ஒரு கொள்கையை ஸ்தாபித்துக் கொள்ளவே அவர் இப்போது முற்பட்டிருக்கிறாரென்பது வெளிப்படுகிறது. இந்த ஆதாரத்தின்மீதுதான் அவர் வைஸ்ராயுடன் பேசியிருக்கிறார்.

அஹிம்ஸைக் கொள்கை காரணமாக இந்த யுத்தத்தை அங்கீகரிக்காமலிருக்க தமக்கும் காங்கிரஸுக்கும் உரிமை வேண்டுமென்றார் காந்திஜி. ஆனால் இவர் இத்துடன் நிற்கவில்லை. ரத்தம் சிந்துவதில் கொண்டு போய் விடக்கூடிய எத்தகைய யுத்த முயற்சிக்கும் இந்தியா உதவி செய்ய கூடாதென்று ஜனங்களிடையில் பிரசாரம் செய்யவும் காங்கிரஸுக்கும் மற்றவர்களுக்கும் உரிமையுண்டென்று காந்திஜி வாதித்தார். மேலும் பிரிட்டனுக்கு யுத்தகாலத்தில் ஸங்கடமுண்டுபண்ணத்தாம் விரும்பவில்லையென்று கூறியதற்கும் காந்திஜி இப்போது கரைவு சொல்கிறார். அதாவது காங்கிரஸின் தேசியகார்யங்களுக்கு அழிவுயேற்படாத வகையில் தான், யுத்த முயற்சிக்கு ஸங்கடம் விளைவிப்பதில்லை யென்று தாம் கூறியதாகவும் சொல்லுகிறார். தவிரவும் காங்கிரஸுக்கு அஹிம்ஸை காரணமாக யுத்த எதிர்ப்பு பிரசாரம் செய்ய எப்படி உரிமையுண்டோ, அதே மாதிரி ஏகாதிபத்யக் கொள்கை எதிர்ப்புக் கக்ஷியாரும் யுத்த எதிர்ப்பிரசாரம் செய்ய அவர்களுக்கு உரிமைதர வேண்டு மென்று காந்திஜி வரன் கேட்கிறார்.

மேலும் காங்கிரஸ்காரர்கள் நாஸிக்கொள்கையைக் கண்டிப்பவர்களாயிருப்பினும் கூட, இது நாஸிகளுடன் யுத்தம் செய்யும் வரையில் சம்மதித்தாக அதற்கு விரிவான அர்த்தம் செய்யக் கூடாதென்று காந்திஜி வைஸ்ராயிடம் கூறிவிட்டார்.

ஆகவே காந்திஜீ கேட்டுள்ள வரன்களும், வெளியிட்டுள்ள வியாக்யானங்களும், மறைந்து நிற்கும் எண்ணங்களும் தேசத்தில் அமைதியுடன் ராஜ்ய நிர்வாஹம் நடத்தக்கடமைப்பட்ட எந்த ராஜாங்கமும் ஏற்கக்கூடியதாயில்லை. அதிலும் இத்தகைய நெருக்கடியான யுத்த ஸந்தர்ப்பத்திற்கு அடியோடு விருத்தங்களானவையே இவைகளை வைஸ்ராய் அங்கீகரியாததில் அதிசயமென்ன? மனச்சாக்ஷிப்படி ஒருவர் யுத்தத்தை விரும்பாதிருக்க உரிமையுண்டுதான். பிரிட்டனிலும் இப்போதுகூட இந்த உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாக வைஸ்ராய் தெரிவிக்கிறார். ஆனால் யுத்த முயற்சிக்கு விரோதமாகவும், யுத்தம் வெற்றியடையாமல் குந்தகப்படும்படியும், பணம் கொடுக்கத்தடைசெய்தும், சிப்பாய்கள் சேரவோட்டாமல் கலைத்தும் எதிர் பிரசாரம் செய்ய இங்கிலாந்தில்கூட அனுமதியில்லை யென்றும் அதே நீதியை இந்தியாவிலும் அமுலுக்குக்கொண்டுவருவது நியாயமென்றும் வைஸ்ராய் சொல்லுவதில் தவறு என்ன?

காங்கிரஸுக்கு அதனிஷ்டபடி யுத்த எதிர்ப்பு பிரசார உரிமை அளிக்கப்பட்டால் அதனால் பிரக்கிருத யுத்தத்தில் இங்கிலாந்திற்கு விசேஷ ஸங்கடங்கள் நேரிடக்கூடுமென்றும் அதனால் இந்தியாவும் வெகுவாக பாதிக்கப் படக்கூடு மென்றும் ஆகவே இந்த நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில் காந்திஜி கேட்கும் உரிமையை அங்கீகரிக்க முடியாதென்று வைஸ்ராய் தெளிவாக கூறுகிறார்.

பேச்சு ஸ்வதந்திர மென்ற மறைவில் நின்றுகொண்டு காந்திஜி அர்த்தமற்ற தமது அஹிம்ஸைக் கொள்கையை பிரதிஷ்டை செய்து கொள்ள முயற்சிப்பதை ராஜீய விவேகிகள் எவரும் அங்கீகரிக்க முடியாது. வெறும் ஒரு வறட்டு கொள்கைக்காக காந்திஜி தம்மையும் தேசத்தையும் பெரும் கஷ்டங்களில் மாட்டிவிட முயற்சிப்பது விவேகமாகாது. முஸ்லீம்லீக் வைஸ்ராயின் வேண்டுகோளை அங்கீகரிக்க மறுத்த போதிலும் அது உருவான குறிப்பிட்ட நன்மைகளைப் பெறவே அப்படிச் செய்கிறது. நிர்வாஹ ஸபையில் அதிக ஸ்தானம் பெறுதல், முஸ்லீம் ஸமூஹத்தின் ராஜிய, மத உரிமை அந்தஸ்துக்களை விருத்தி செய்து கொள்ளுவது போன்றவைகளுக்காகவே அது போராடி வருகிறது. அதுபோல் காங்கிரஸும் செய்வதே புத்திசாலித்தனமாகும்.

காங்கிரஸ்காரர்களின் வாயளவு அஹிம்ஸா உணர்ச்சியும் அவர்களது பிரசாரமும் நமக்கு அநுபவத்தில் தெரிந்ததுதான். இப்போது காந்திஜி ஆரம்பிக்க விருக்கும் யுத்த எதிர்ப்பு பிரசாரத்தினால் தேசத்தில் பெருத்த விபரீத விளைவுகள் ஏற்படக்கூடும். அமைதி அழிந்து எங்கும் கலவரம் ஏற்படக்கூடும். இந்த ஸந்தர்ப்பத்தில் இதுமிகவும் கேடானது. ஆதலால் கூடிய சீக்கிரம் கூடப் போகிற கார்யக்கமிட்டியானது வீண் அஹங்காரத்தையும், பிரயோஜன மற்ற கொள்கையையும் கைவிட்டு, புத்திசாலித்தனம் நிறைந்த வழியில்இறங்கும்படி பகவான் அதற்கு புத்தி கொடுக்கவேண்டும்.

K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

		Rs.	A.	P
1.	Kalidasa's Heroes	0	6	0.
2.	The science of the soul	1	8	0
3.	Manu, the friend of Man	0	8	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

தக்ஷிணாயன பிரதம விவாஹம்

(மஹாமஹோ பாத்யாய ஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள்)

ஆர்யதர்மம் இதழ்களில் தக்ஷிணாயன பிரதம விவாஹ விஷயமாய் ஸமீபத்தில் கும்பகோணம் அத்வைத ஸபையில் ஏற்பட்ட மதபேதம், அதைப்பற்றிய மத்யஸ்தர்களின் தீர்மானமும், அந்த ஸபையில் படிப்பதைப் பற்றியே ஸபையோரின் அபிப்பிராய பேதம், அதை முடிவிற்கு கொண்டுவர ஸ்ரீ காஞ்சீ காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஆசாரியசரணாளிடம் ஒப்புவித்தல், ஸ்ரீ அவாளுத்திரவின் பேரில் நவம்பர் மாதம் 12-ந்தேதிக்குள் பண்டிதர்களின் அபிப்பிராயத்தை எதிர்பார்த்தலிவற்றை கவனித்தேன். பண்டிதர்களின் அபிப்பிராயம் மத்யஸ்தர்களின் கொள்கையை பராமர்சம் செய்வதின் பொருட்டென்றால் மத்யஸ்தர்களின் தீர்மானத்தை ஸம்ஸ்கிருத பாஷையில் தனியாய் ஒவ்வொரு பண்டிதர்களுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்தால் அது உபகாரமாயிருக்கும்.

விவாஹ விஷயம் நான்கு மதத்தையும் சார்ந்ததைப்பற்றி எல்லா ஸம்பரதாய பண்டிதர்களுக்கும், விசேஷித்து தர்ம சாஸ்திரங்களில் பயிற்சி செய்த தர்மஞர்களுக்கும் விசாரம் செய்ய இடம் கொடுப்பது ஆவசியகமென்று தோற்றுகிறது. முன் ஒரு தடவை அத்வைத ஸபையில் தற்பொழுது நியமிக்கப்பட்ட மத்யஸ்தர்களில் பெரும்பாலும் தங்களபிப்பிராயத்தை பிரசுரம் செய்து அதற்கு கண்டனங்களும் அனேகம் ஆர்ய தர்மத்திலேயே வெளி வந்திருப்பதால் பெரும்பாலும் மத்யஸ்தர்களும் அதை ஆபத் தர்ம நிலையில் தான் ஆதரித்திருப்பதாக தெரிகிறது.

ஆபத் தர்மங்களை ஸர்வ ஸாதாரணமாய் ஆதரிக்கும்படி தீர்மானம் ஒரு ஸபா மூலமாய் செய்வது ஸனாதன தர்ம ஸிந்தாந்தங்களுக்கே பெரிய ஆபத்திற்கிடமாகும். தேவாலய பிரவேசம், ருதுமதீ விவாஹம், சமுத்திரயானம், அபக்ஷ்ய பக்ஷணம், அபேய பானம், ஹரிஜன இயக்கம் முதலானவைகளையும் ஆபத் தர்மமானபடியால் தேவாலய மசோதா, சாரதா மசோதா வகைகளுக்காக காங்கிரஸ், ஆர்ய ஸமாஜம், ஹிந்து மகாஸபை முதலான ஸமாஜங்களுடன் போராட்டத்தின் நோக்கமே நிலை குன்றி விடும். எப்படியும் இது விஷயம் முடிவின் பாரம் ஸ்ரீ ஆசாரியசரணாளிடம் இருப்பதால் மனதிற்கு பூர்ண ஸமாதானமேற்படுகிறது. "किमिववचनं नकुर्यात् नास्ति वचनस्याति भार:" என்ற நீதியைக் கொண்டு ஸனாதனிகளுக்கு ஸ்ரீ மதாசாரியர்களின் கட்டளையே சரணம். மற்ற ஸம்பிரதாய பண்டித சிகாமணிகளும் அனேகர் இந்த வருஷம் அத்வைத ஸபையின் இந்த விஷயத்தில் கலந்து கொண்டிருப்பதாக ஆர்யதர்மம் மூலமாய் தெரிகிறது. அப்படியிருந்தும் அவர்களும் 2 பேர்களாவது மத்யஸ்த கோஷ்டியில் சேராமலிருப்பது துக்கிக்கத்தக்கதே. கண்கெட்டு ஸூர்யநமஸ்காரத்தால் என்ன பயன்? இவ்விஷயத்தில் எல்லா ஸம்பிரதாயாசாரியர்களதும் அபிப்பிராயத்தை பெற அத்வைதஸபா காரியதர்சி பிரயத்னம் செய்தால் உபகாரமாயிருக்கும். ஒருநாள் விவாஹ விஷயமாய் ஆற்காடு சித்தூரில் ஸ்ரீ ஆசாரிய பாதாள் கொடுத்த உத்திரவை அனேகர் ரதுர்வினியோகம் செய்வதும் கவனிக்கத்தக்கதே. இதைப்பற்றி அனேகம் பேர் என்னிடம்நேரிலும் பத்திரிகை மூலமாயும் என் அபிப்பிராயத்தை ஆர்யதர்மத்தில் பிரசுரம் செய்ய தூண்டுகிறார்கள். ஆனால் மத்யஸ்தர்களது தீர்மானத்தை ஆராய்ந்து பார்க்காமல் நான் ஒன்றும் தற்பொழுது வெளியிட சக்தியற்றவனாயிருகிறேன். ஸ்ரீ ஆசாரிய சரணாளே சரண மென்றிருக்கும் ஒன்னைம் போலத்தவர்களுக்குஇதில் கவலை ஏன்?

தக்ஷிணாயன பிரதம விவாஹ விவாதம்.

சிஷ்டாசாரம்முக்யமானது.

(சேங்காலிபுரம் வி. பஞ்சாபகேசய்யர்)

உத்தராயணத்தில் தான் பிரதம விவாகம் செய்வதென்ற வழக்கத்தை மாற்றவேண்டுமெனப் பண்டிதர்களிடையே ஒரு இயக்கம் தோன்றியிருக்கிறது. அதற்கு ஸ்மிருதிகளில் ஆதாரமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இருக்கலாம். அதைப்பற்றி விவாதிக்க எனக்குப் போதிய பரிசயமில்லை. ஆனால் தெட்சிணாயனத்தில் பிரதம விவாகம் செய்யாமலிருப்பது பாதகமென்று ஸ்மிருதிகளில் இருப்பதாக ஒருவரும் சொல்லவில்லை. ஆகையால் "தெட்சிணாயனத்தில் பிரதம விவாகம் செய்யவேண்டாம்" என்று ஏற்பட்டிருக்கும் சிஷ்டாசாரத்தை அனுசரிபதில் தோஷம் ஒன்றுமில்லை.

நம்மிடையே அனுஷ்டானத்திலிருக்கும் எல்லா ப்ராசீன ஆசாரங்களும் ஜன சமூகத்தின் தன்மையை உத்தேசித்தே தீர்க்கதர்சிகளான முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று மேல் நாட்டு ஆராய்ச்சிக்காரர்களாலேயே ஒன்றன்பின்னொன்றாகக் கண்டு பிடிக்கப்பட்டு வருகிறது. சாதாரணமாய் பார்க்கும்போதும் உத்தராயணம் விவாகம் முதலிய சுப காரியங்களுக்கு ஏற்றதென்பதும் தெட்சிணாயனம் ஏற்றதல்லவென்பதும் விளங்கும். தெட்சிணாயனம் இருந்தவிடத்திலேயே இருந்து செய்யவேண்டிய பல தைவ பித்ர் கர்மாக்கள் நிறைந்துள்ளது. மழை பனி இவை ஆதிக்கமுள்ள காலம். சுப காரியங்களுக்கு உதவக்கூடிய சாமக்ரிகளுக்கு ஏற்காத காலம். லௌகீக ரீதியாயும் தட்சிணாயனம் முழுமையும்விவசாயிகளின் வேலை காலம். உத்தராயணமோ விவசாயிகளுக்கும் மற்றும் விவகாரிகளுக்கும்கூட விடுமுறை காலம்.

இவைகளையெல்லாம் உத்தேசித்துத் தான் முன்னோர்கள் உத்தராயணத்தில் தான் விவாகம் செய்யவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஒரே நாளில் ஒருவருக்கும் தெரியாமல் விவாஹத்தைச் செய்வதற்கு இந்த சவுகரியங்களையெல்லாம் எதற்காக பார்க்கவேண்டுமென்று கேட்கலாம். அப்படிச் செய்யலாமென்று முன்னோர்கள் நினைத்திருந்தாகத் தோன்றவில்லை. பந்துமித்திரர்கள் கூடி அவர்களை ஆதரித்து அவர்களுக்குள் நெருங்கிய பழக்கமும், ஒற்றுமையும், சினேக பாவமும் விருத்தியடைய, நவீன நாகரீகர்கள் தேக்கச்சேரி தோட்டக்கச்சேரி விருந்துகள் வைப்பதுபோல், முன்னோர்கள் விவாக முதலிய சுப சந்தர்ப்பங்களை உபயோகப்படுத்திக்கொள்ள நினைத்திருந்திருக்க வேண்டும்.

மேலும் தற்காலம் மெஜாரிட்டி பலத்தை கொண்டு மத விஷயங்களில் தலையிட்டு சட்டங்கள் செய்து நிர்ப்பந்தமாய் சனாதன ஆசாரங்களையெல்லாம் ஒவ்வொன்றாக மாற்றிக்கொண்டு வரும் ஆசார திருத்தக்காரர்களின் கொள்கையை இந்த தட்சிணாயன ப்பிரதம விவாஹ இயக்கம் ஆதரிப்பதாயிருப்பதை பண்டிதர்கள் உணராமலிருப்பது வருந்தத் தக்கது. சில நிதர்சனங்களைக் கூற விரும்புகிறேன்.

சில வருஷங்கள் முன் கடைசியாய் சென்னையில் காங்கிரஸ் கூடியபோது திருவல்லிக்கேணியில் சனாதனிகளின் மகாநாடு ஒன்று கூடியது. தென்னிந்தியப் பிரபல பண்டிதர்கள் பலரும் அங்குகூடியிருந்தனர். பண்டித மதன் மோகன் மாளவியா அங்கு வந்து தீண்டாமை விலக்கைப்பற்றி வெகு நேரம் சமஸ்கிருதத்திலேயே பேசினார். தீண்டாதாருக்கு சம்ஸ்காரங்கள் உண்டென்றும் அவர்களுக்கு மந்திரோபதேசம் செய்யலாமென்றும் சில ஸ்மிருதிகளிலிருந்து ஆதாரங்களைக் காட்டினார். கையிலேயே புஸ்தகங்களையும் கொண்டுவந்திருந்தார். அதற்கு ஆட்சேபனையிருந்தால் சொல்லும்படியும் அவர் கேட்டார். ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு அவர் ஊர் போன பிறகு கங்கா நதிக்கரையில் அனேகம் தீண்டாதார்களுக்கு உபநயநம் போன்ற சம்ஸ்காரங்களும் மந்திரோபதேசமும் செய்ததாக பத்திரிகைகளில் வெளிவந்தது.

மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் 25 வருஷங்களுக்கு முந்தியே ருதுமதி விவாஹம் தான் சாஸ்திரசம் மதமென்று ஸ்மிருதிகளையும் விவாஹங்களில் உபயோகிக்கப்படும் மந்திரங்களையுமே ஆதாரமாகக்காட்டி புஸ்தகம் எழுதியிருக்கிறார்.

இம்மாதிரி [illegible] சிஷ்டாசாரம் தான் ஆதாரம். சுருதி ஸ்மிருதிகளில் சந்தேகம் தோன்றுமிடங்களிலெல்லாம் சிஷ்டாசாரத்தைத்தான் பிரதானமாகக் கொள்ளவேண்டுமென்பது ஸ்மிருதிகர்த்தர்களின் கட்டளை. காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து அவ்வப்போது தோன்றுகிறபடி ஆசாரங்களை மாற்றிக் கொண்டே போகலாமென்பது ஆசாரசீர்திருத்த வாதிகளின் கொள்கை. உத்தராயணத்தில் தான் பிரதம விவாஹம் செய்யவேண்டுமென்ற வெகுநாளைய வழக்கத்தை, அதாவது சிஷ்டாசாரத்தை, மாற்றலாமென்பது ஆசாரசீர்திருத்த வாதிகளின் கொள்கையை ஆதரிப்பதேயாகும்.

தமிழில். கே. ஆர். வீ யின்பிரசுரங்கள்

		ரூ.	அ.	பை.
1.	மூஷிகவாஹனம் முதலிய எழு ஸ்தோத்ரங்கள்	0	2	0
2.	இந்திராக்ஷீ சிவகவசம் ...	0	2	0
3.	ஸங்க்ஷேப ராமாயணம் ...	0	2	0
4.	ருக்வேத ஸந்தியாவந்தனம்	0	1	0
5.	யஜுர்வேத „ ...	0	1	0
6.	ஸாமவேத „ ..	0	1	0
7.	ருக்வேத அமாதர்ப்பணம் ...	0	1	0
8.	யஜுர்வேத „ ...	0	1	0
9.	ஸாமவேத „ ...	0	1	0
10.	வைஷ்ணவ சந்தியாவந்தனம்	0	1	0
11.	„ அமா தர்ப்பணம் ...	0	1	0
21.	ஆதித்யஹ்ருதயம் (பதவுரை கருத்துரையுடன்) ...	0	2	6
13.	ஸ்ரீ துர்காஸ்தோத்ரம் (கிரந்தம்)	0	1	0
14.	௸ (தமிழில் கருத் துரையுடன்)	0	2	0

தபால் சிலவு தனி.

கிடைக்குமிடம்:
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம்
கும்பகோணம்.

காங்கிரஸின் கொள்கையும், ஸநாதனிகளும்

(மஹாமஹோபாத்யாய ஸ்ரீஅனந்தகிருஷ்ண சாஸ்திரி)

ஆர்யதர்மத்தின் பத்திராதிபர் காங்கிரஸ் தீர்மானத்தைப்பற்றி வெளியிட்ட அபிப்பிராயத்தை கவனித்தேன். தர்ம விஷயங்களில் தர்மாசாரியர்களின் அபிப்பிராயமே சரணம் என்ற கொள்கை ஸநாதனிகளிடமிருக்க, இராஜ நீதியியக்கத்தில் மகாத்மா காந்திஜீயையே காங்கிரஸ் சரணமடைவது எப்படி தகாது என்று தெரியவில்லை. ஜனநாயகம் என்ருலும் ஒரு முடிவிற்கு வர எல்லா அங்கத்தினரும் ஒன்றுகூடி ஒருவரை தனது ஆசிரியராக தெரிந்தெடுப்பது தவறுதலாகுமா? ஒரு தலையில்லாத ஸம பலமான அங்கங்களால் என்ன செய்ய முடியும்? அஹிம்ஸா விஷயத்தில் மகாத்மா காந்திஜீ வெளியிட்ட அபிப்பிராயம் சனாதனிகளுக்கு எப்படி விரோதமாகும்? மகாத்மா காந்திஜீயின் அபிப்பிராயத்தை இப்பொழுதாவது வெளிவிட்டு சொன்னது மெச்சத் தக்கதே. காங்கிரஸ் இராஜநீதி மகாசபையேயொழிய தர்மத்தை சார்ந்ததல்லவென்றும் தர்மம் என்ற நோக்கத்தால் ஹிம்ஸையையும் தான் அஹிம்ஸையென்றே நினைப்பதாகவும் ஜைன மதம் வைஷ்ணவமதமிவற்றை பிரசாரம்செய்வது தனது கொள்கையல்லவென்றும் சொன்னதால் ஏற்படவில்லையா?

தர்மங்களைபற்றி பேசுவதற்கு ஹிமாலயம் தான் கெதியென்று பண்டிநெஹ்ரு ஒருநாள் மகா-ள-ள-ஸ்ரீ ராவ்சாகேப் நடேசய்யருக்கு எழுதின கருத்தும் அது சமாஜத்திற்கு தகுந்ததல்ல. அவரவாது தனி இல்லத்திலேயோ அல்லது காந்தியாச்ரமத்திலேயோ விசாரிக்கத் தக்கது என்பது தான் என்று வெளியாகிறது. தர்மங்களைப்பற்றி காங்கிரஸ் பேசாது என்று உறுதி ஸ்பஷ்டமாய் கூற இது வரையிலும் தர்ம விஷயமாய் செய்துகொண்டு வருமியக்கங்களை அடியோடு விட்டு பண்டிட் நேஹ்ரு சுபாஷ் போஸும் இவைகளின் கொள்கைகளுடன் கலந்து மத விஷயத்தில் ஜன நாயகப்பற்றை விட்டால் காங்கிரசுக்கு சமமான மகாநாடு ஏற்படாது என்பதே என் கருத்து.

மகாத்மா காந்திஜீ அஹிம்சா விஷயத்தில் செய்த வெளிப்படையான கொள்கையை ஹரிஜன இயக்கம், மத விஷயங்களில் மசோதாக் களிவற்றிலும் கை கொள்ள வேண்டியதற்கு சமயத்தை ஸநாதநிகள் எதிர்பார்க்கிருர்கள். இராஜநீதியியக்கத்தில் முஸ்லீம் லீக், ஹிந்துமஹா சபை போல எல்லா வகுப்பு மகாநாடுகளின் அந்த காலம் ஏற்படுவதற்கு அதுதான் சமயமாகும். தற்சமயம் யுத்தத்திற்கு விரோதமாய் பிரசாரம் செய்ய அனுமதி கேட்பதும் தாடி எரிய, சுருட்டுக்கு நெருப்புக் கேள்பதே. யுத்தம் முடிந்த பிறகு ஜனநாயக விஷயமாய் ஆலோசித்து தீர்மானம் செய்வதாக கொடுத்த ராஜாங்க உறுதி வார்த்தைக்கு ஏன் இடம் கொடுக்கக்கூடாது என்று ஆலோசிக்க வேண்டியதே. ஜனநாயகம் பேரில் ஸ்வஜனநாயகத்தையே விரும்பும் ஸி. ஆர். அவர்களது நோக்கம் மதராஸ் பிராந்தத்திற்கு ரொம்பவும் ஆபத்திற்கு இடமானது. எப்படியும் ஆர்யதர்ம பத்திராதிபர் காங்கிரஸ் போரால் தற்காலம் நடத்தும் அனதிகார சர்சையை தடுப்பதற்கு யத்னம் செய்வதை பாராட்டுகிறேன். மகாத்மா காந்திஜீ தன் அபிப்பிராயத்தை அனேக தடவை மாதிரி மாற்றுமலிருக்க வேணுமேயென்று பத்திராதிபர் பயப்படுவதும் மெச்சத் தக்கது. தற்காலநிலையிலேயே மகாத்மா காந்திஜீ இருந்தால் "மார்கதரிசி மஹர்ஷி" என்ற சொற்படி மகர்ஷியாயுமாகலாமென்று தோன்றுகிறது. ராஜ நீதி இயக்கத்தில் அவரையே கண் முடித்தனமாயோ கண் திறந்தோ நம்புகிறவர்களை சன்மார்க்கத்திற்கு கொண்டுவர அவரே காரணமானுல், ஸநாதனிகளுடைய நோக்கமும் நிலைநிற்குமென்பதில் ஸந்தேகமில்லை. தற்சமயமும் கவர்ன்மெண்டார் மகாத்மா காந்திஜீ, தர்மவீர் ஸவர்கர், ஜின்னு இவர்களுக்கு கொடுக்கும் மதிப்பை ஏன் ஸநாதனிகளுக்கு கொடுப்பதில்லையோ தெரியவில்லை. கோவிலில் அர்ச்சனைகள் செய்யவும் விஷ்ணு யாகம் செய்யவும் பிரேரேபிணைகள் மாத்திரம் ஸநாதனிகளிடம் நடக்கிறது. எப்படியும் "ராஜா தார்மிகோ பவது" என்ற பிரார்த்தனையும் நடந்துகொண்டிருப்பதால் முடிவு நன்ருகவே ஏற்படுமென்று விசுவாஸிக்கிறேன்.

மதிப்புரை

ஸ்ரீலலிதோபாக்யானம்

ஸ்ரீலலிதாதேவியின் ஸஹஸ்ரநாமம் திரிசதி முதலிய கிரந்தங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்த பிறகு அவளது திவ்யசரித்திரம் பண்டித பாமர ஸாதாரணமாக யாவரும் வாசித்து உஜ்ஜிவிக்கும்படி தமிழில் வெளிவராதது இதுவரையில் ஓர் குறையாகவே இருந்தது. இந்தப் பெரிய குறையை நீக்க ஸுக்ருஹீதநாமதேயரான ஸாஹித்ய வாங்முக பூஷணம், மஹாமஹோபதேசக ஸ்ரீவத்ஸ வே சோமதேவசர்மா அவர்கள் முன்வந்து தேவி உபாஸகர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரும் உபகாரம் செய்திருக்கிருர். ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்த லலிதோபாக்யானமென்ற ஸ்ரீதேவி சரித்திரத்தை அவர் மிகவும் ஸுலபமாயும் அழகாயுமுள்ள நடையில் அதிக விஸ்தாரமின்றியும் விஷய ஸாரத்தை விடாமலும் திராவிடபாஷையில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிருர்.

பராசக்தியான ஸ்ரீலலிதாதேவியின் சரிதாம்ருத ஸாரத்தின் இனிமையான ரஸத்தை யாவரும் ஸுலபமாக அறியும்படி ஸ்ரீ சர்மா அவர்கள் செய்துள்ள உபகாரத்திற்கு யாவரும் நன்றிசெலுத்த வேண்டியது. ஸ்ரீசர்மா அவர்கள் ஆஸ்திக சமுஹத்திற்குத் தமது வாக்சாதுர்யத்தாலும் கிரந்த பிரகடனகைங்கர்யத்தாலும் செய்துவரும் அளவற்ற கைங்கர்யங்களில் இதுவும் உத்தமமாகும்.

இக் கிரந்தத்தில் ஆரம்பத்தில் குப்பகோணம் ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகளவர்களின், ஸ்ரீமூர்த்தியும், ஸ்ரீமுகமும் புனிதமாக அமைத்துள்ளன.

ஸ்ரீமான் ஈ. ஸுப்பிரமண்ய அய்யரவர்கள் பல விஷயங்களடங்கிய மிகச் சிறந்த முகவுரை ஒன்று எழுதியிருக்கிருர்.

ஸ்திரீகள், புருஷர்கள், பாலர்கள் ஆகிய யாவரும் இந்தக் கிரந்தத்தை வாங்கிபடித்து ஸ்ரீலலிதாம்பாளின் மஹிமையை அறிந்து அவளது அநுக்ரஹத்திற்குப் பாத்திரமாகக் கூடிய அரிய சந்தர்பத்தை இழந்து விடக் கூடாது.

முக்யமாக இந்த நவராத்திரி புண்யகால ஸந்தர்பத்தில் இப்புஸ்தகத்தைபக்திசிரத்தையுடன் படிப்பகால் விசேஷ பலன் உண்டென்பதையும் நாம் சொல்ல வேண்டியிருக்கிறது.

புஸ்தகம் வெகு ரமணீயமாக அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக படங்களும், வேறுசில முக்ய விஷயங்களும் அடங்கியது 350 பக்கங்கள் அடங்கிய இப்புஸ்தகத்தின் விலை ரூ 2. சென்னை ஸ்ரீராஜம் கம்பெனியிலும் ஸ்ரீஜனார்த்தன பிரஸ் கும்பகோணம் என்ற விலாஸத்திலும் கிடைக்கும்.

முத்திராதிகாரி பிரசாரம்

பிரதிமாதமும் முதலில் வசூலிக்கப்படும் ராமநாம அக்ஷதை முடிச்சுக்களையும், பிரதிதுவாவசிக்கும் வசூலாலாகும் பசுவின் நெய்யை, ஆக்ஞைப்பிரகாரம் ஓர் பாகம் அம்பாள் சன்னதி தீபத்துக்கு ஸமர்ப்பித்து பாக்கியை ஸ்ரீமடத்தில் சேர்ப்பிப்பது போல் இந்த மாதத்திலும் அப்படியே அக்ஷதை முடிச்சுக்களையும் பசுவின் நெய்யையும் ஸமர்ப்பிக்கப்பட்டது.

ராம நாம அக்ஷதை முடிச்சுக்களையும் பசுவின் நெய்யையும், சிரத்தையுடன் கொடுத்தஷெடிபிளாக்கிலுள்ள சிஷ்யகோடிகளுக்கு ஸ்ரீமத் ஆசார்யாள் மஹாஸன்னிதானத்திலிருந்து மனுஷியாள் மூலம் அனுக்ரஹித்த ஸ்ரீ ஆதி சங்காருடைய படமும், தற்காலம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்திலிருக்கும் ஸ்ரீஜகத்குருவின் படமும் சேர்ந்தாற்போல் அடங்கிய, படங்களை அவரவர்கள் பேரை எழுதிக் கொடுக்கும்படி ஆக்ஞாபித்தபிரகாரம், கொடுக்கப்பட்டது.

திருச்சினுப்பள்ளியில் உபன்யாஸம்

இம்மண்டலத்தின் 5வது விதிப்படி சிலம்பனி வடக்கு அக்ரஹாரத்தில் நெ100 வீட்டில் ரெயில் அவுட் ஏஜென்ஸிக்கடுத்த பஜனைமடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தார்மிக வித்யா சங்கத்தின் ஆதரவில் 28-9-40 சனிக்கிழமையன்று பகவத் பஜனையும், 29-9-40 ஞாயரன்று இரவு 8 மணிக்கு ப்ரஹ்மஸ்ரீ நா. கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் ஆஸ்திக்யம் என்ற விஷயத்தைப் பற்றி அருமையான உபன்யாஸமும் நடைபெற்றன.

வைகநல்லூர் பாதுகா பட்டாபிஷேக மஹோற்சவம்.

பல மாதங்களாய் இவ்வூர் அக்ரஹாரத்தில் மைசூர் ஆஸ்தான வித்வான் சுக்லயஜுர்வேத பிரதிஷ்டாபக ப்ரஹ்மஸ்ரீ இஞ்சிக்கொல்லை சிதம்பரகனபாடிகள் அவர்கள் சிஷ்யரும் வைகநல்லூர் சுக்லயஜுர்வேத பாடசாலா அத்யாபகருமானப்ரஹ்மஸ்ரீ நாராயணமங்கலம் பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உபந்யசிக்கப்படுவருதவதில் நாளது விக்ரமஹூ புரட்டாசிமீ 4௨ (19—9—40) அன்றய தினம் ஸ்ரீமத் பாதுகாபட்டாபிஷேக மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. அச்சமயம் ப்ரஹ்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு ஸ்ரீகாஞ்காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரியஸ்வாமிகள் அவர்களின் அநுக்ரஹ பூரிதமான சால்வையும் 5 ரூபாய் உபகாரத்திரவியமும் அவ்வூர்பிரபல மிருசுதார் மகா-ள-ள-ஸ்ரீ ராதாகிருஷ்ணையரால் மஹாஸன்னிதானத்தின் சார்பாக வழங்கப்பட்டது. மந்திராக்ஷதை சந்தனதாம்பூல பிரசாதம் வழங்கி இனிதுமுடிவடைந்தது. இவ்விஷயத்தில் ஷெடி அக்ரஹாரத்திலுள்ள ஆபாலவிருத்த மஹாஜனங்களின் உத்சாகம் மிகவும் சிலாகிக்கத்தக்கது.

திருகருகாவூர்

புனர் வஸுராமாயணம் 26-9-40, வியாழக்கிழமை முதல் திருக்கருகாவூர் அக்ரஹாரத்தில் உடையாளூர் ஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் பாராயண பூர்வகமாய் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண உபந்யாசம் நடந்து வருகிறது.

ஓ. கி.

ஒரு நாள் விவாஹம் அசாஸ்திரீயம்

கும்பகோணம் அத்வைத சபையில்

போலகம் ஸ்ரீ சுந்தர சாஸ்திரிகள் பிரஸங்கம்.

விவாஹம் என்பது முக்யமான ஆத்மஸம்ஸ்காரம். சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட 48 ஸம்ஸ்காரங்களில் 40 ஸம்ஸ்காரங்களாகவும் 8 குணங்களாகவுமிருக்கின்றன. இவைகளில் 18 ஸம்ஸ்காரங்கள் ரொம்பவும் ஆவஸ்யகம். இதில் விவாஹம் ரொம்பவும் முக்யமாயும் ப்ரசித்தமாயுமிருக்கிறது. கலியாணம் என்ற பதமே முக்யமாக விவாஹத்தைத் தான் சொல்கிறது. ராமாயணம் என்பது எப்படி முக்யமாக வால்மீகியத்தைக் குறிக்கிறதோ அதே போல விவாஹ மூலம் தான் எல்லா ச்ரௌதகர்மாக்களும். பிருமணனுக்கு முதல் ஜன்மாதன் தாயாரிடத்திலிருந்து எற்படுகிறது, 2வது ஜன்மா 8வது வயதில் ஸாவித்ரி என்ற மாதாவினிடமிருந்து எற்படுகிறது. "द्वितीयं मौञ्जिबन्धनं" அப்பொழுது தான் பிருமண்யம் சித்திக்கிறது, ஷடி குழந்தை வளரும் ஸ்தாபனங்களுக்குத்தான் ஆச்ரமம் என்று பெயர். ரிஷிகள் வஸிக்குமிடங்களுக்கு ஆச்ரமம் என்ற பெயர் ஸர்வ பிரஸித்தம் ஸுஹவயடும் முதலாவது ஆஸ்ரமம் "महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः" என்ற வசனப்படி கர்மாக்களால் பிருமண்யம் என்ற சிசு அபிவிருத்தியை யடைகிறது. 2 வதான கார்ஹஸ்த்யாச்ரமம் விவாஹத்தால் தான் சித்திக்கிறது. ரிஷிருணம், பித்ருருணம், தேவருணம், என்ற 3 ருணங்களில் முதலாவது பிரம்மசர்யாச்ரமத்தில் நிவர்த்தியானாலும் மீதி இரண்டு ருணங்கள் கிருஹஸ்தாச்ரமத்தில் தான் நிவர்த்தியாகின்றன. சாஸ்திரங்களும் கிருஹஸ்தாச்ரமத்தில் தான் தா பர்யமுள்ளவைகள். ஸூத்ரகாரர்களும்.

" सर्वापेक्षाच यज्ञादिश्रुतेरश्ववत्"

" कृत्स्नभावात्तु गृहिणोपसंहारः"

என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த விவாஹத்திற்கு சுத்திரொம்பவும் ஆவச்யகம். சாஸ்திர சோதிதமான வயது, காலம், நியமம் இவைகளால் தான் சுத்தி எற்படும் விவாஹம் அசுத்தமாகி விட்டால் ஒரு கர்மாக்களும் பலனைகொடுக்காது. தர்மானுஷ்டானத்தால்தான் ஆத்மவிசார ப்ரவிர்த்தி எற்படுவதால் அத்வைத சபையிலும் இது விஷயத்தை சொல்ல வேண்டியதுதான். விவாஹம் என்பது பாணிக்ரஹணத்தால் சிந்திக்கிறது. ஸப்தபதிகரணத்தால் பார்யா த்வம் சித்திக்கிறது.

कुलमग्रे परीक्षेत

என்ற வசனங்கள் கன்யாபரீக்ஷணம் ரொம்பவும் ஆவச்யகமென்று தெரிவிக்கிறது. ப்ரகிருதத்தில் காலத்தைப் பற்றித்தான் முக்யமாகச்சொல்லவேண்டியது. விவாஹத்திற்கு காலம் முக்யமான அங்கம். காலம் தவறினால் கர்மாவின் வீர்யம் குறைகிறது.

'प्राणैः कण्ठगतैरपि। न लोभात् जीवितस्यापि हेतोः'

என்று எப்பேற்பட்ட ஆபத்காலத்திலும் தர்மமார்க்கத்திலிருந்து நழுவக்கூடாது என்று சொல்கிறார்கள். காலத்தை நம்மிஷ்டப்படி குறைக்கக்கூடாது. காலநிர்ணயம் ஸ்மிருதிகளாலும் ஜ்யோதிஸ் சாஸ்திரங்களாலும் தெரிகிறது. ஜயோதிஸ் சாஸ்திரத்தை வேத புருஷனுடைய கண்ணாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் சாமான்யமாகவும் சமக்ரமாகவும் காலத்தைச் சொல்கின்றன. ஸூத்தரங்கள் அந்தந்த கர்மாவின் அசாதாரணமான காலத்தைச் சொல்கின்றன.

"मन्वादयः प्रणेतारः धर्मशास्त्रस्य"

என்று ஸ்மிருதிகளுக்கும்தர்ம சாஸ்திரங்கள் என்று பெயர். ஸ்மிருதிகளுக்கும் கிருஹ்யங்களுக்கும் விரோதம் வந்தால் ஸ்மிருதிகள் தான் ப்ரமாணம். கிருஹ்ய ஸூத்ரங்கள் ஒவ்வொன்றாகப் பார்த்தோமானால் ஒருநாள் விவாஹத்திற்கு கொஞ்சம் கூட இடமிருப்பதாய் தெரியவில்லை. முதலாவதாக ஆச்வலாயனர்

अक्षारलवणाशिनौ+वाचयीत

என்று சொல்கிறார். பாணிக்ரஹணம் ஆனதிற்கு பிறகு 'तिष्ठेदहः शेषं' என்றபடி பகல் பூராவும் மௌனமாயிருந்துவிட்டு அருந்ததிதர்சனத்திற்கு பிறகு தான் பேசலாம். மௌனம் என்ற பதத்திற்கு மந்திரார்த்த சிந்தனம், மனஸ் ஸந்தோஷணம் என்ற வியாக்யானம் செய்கிறார்கள் மௌனத்தை ச்ராத்தத்தில் ரொம்பவும் விசேஷமாகச் சொல்லியிருக்கிறது.

"यावदुष्णं भवेदन्नं यावदश्नन्ति वाग्यताः ।
पितरस्तावदश्नन्ति यावन्नोक्ता हविर्गुणाः ॥"

அருந்ததீ தர்சன காலத்தில் மௌனமாயிருக்க வேண்டிய நியமத்தை விட்டு விட்டு இந்தக்காலத்தில் பரிஹாஸமான வார்த்தைகளெல்லாம் பேசுகிறார்கள். இதற்குப்பிறகு கடைசிபக்ஷம் மூன்றுநாளவது நியமத்துடனிருக்கவேண்டும். உப்பு சேர்ந்த ஆகாரம் கூடாது. அலங்காரம் செய்து கொள்ளலாம் கட்டிலில் படுத்துக்கொள்ளக்கூடாது. கீழே தான் படுத்துக்கொள்ள வேண்டும். ஒரே படுக்கையில் பிரம்மசார்ய விரதத்துடன் தம்பதிகள் நித்திரை செய்வேண்டும். எல்லா ஸூத்ரகாரர்களும் இந்த பிரமசர்ய நியமத்தை ஒரே மாதிரியாகச்சொல்லுகிறார்கள் ஸ்மரணம், ஸம்பாஷணம் முதலான 8ம் இல்லாமலிருப்பது தான் பிரம்மசர்யம் ஒரே படுக்கையில் இருந்து கொண்டு பிரம்மசர்யத்தை அனுஷ்டிப்பது ரொம்பவும் கஷ்டம். பிரம்மசர்யம் என்பது நமக்கு ஒரு பெரிய பரிக்ஷை. விஷய ஸந்நிதானத்திலும் ஒரு வருஷம் மனதையடக்குதல் இவ்விதம் நியமங்களை அனுஷத்தால் ரிஷிகல்பனான புத்திரன் பிறக்கிறான். அவனால் ஸர்வகுலங்களுக்கும் உத்தாரம் எற்படும் 3நாள் அனுஷ்டித்தால் கொஞ்சம் சுசீலனான புத்திரன் பிறப்பான். " एकर्षिर्जायते', இதற்கு மற்றொரு அர்த்தம். एकत्वं सा गता भर्तुः पिण्डे गोत्रेऽथ सूतके

பாணிக்ரஹத்தால் கன்னி தன் பித்ருகோத்திரத்திலிருந்து நழுவிவிடுகிறாள்.

स्वगोत्राद् भ्रश्यते नारी

3நாள் நியமத்தையனுஷ்டித்த பிறகு 4வது நாளில் பர்த்ரு கோத்திரத்யையடைகிறாள். ஏககோத்திரத்வம் இரண்டு பேருக்கும் சித்திக்கிறது. ஒருநாளில் விவாஹத்தை பூர்த்தி செய்தால் அந்தக் கன்னிகை தன் பித்ரு கோத்திரத்திலிருந்தும் நழுவி பர்த்ரு கோத்திரத்தை அடையாமல் அவாந்தரத்தில் இருப்பதால் எந்த கோத்திரமாக வியவஹரிப்பது? பிறகு सूर्याविदे वासो दद्यात् ஸூர்யாஸூக்தத்தை நன்றாக அறிந்த பிருமணனுக்கு தீக்ஷாவஸ்திரத்தைகொடுக்கவேண்டும். இது 4வது நாளில். விவாஹத்திற்கும் சந்ததிக்கும் சம்பந்தமிருப்பதால் விவாஹம் பரிசுத்தமாயிருந்தால் தான் சந்ததிகளும் பரிசுத்தமாக இருக்கும்

एतत् षाट्कौशिकं शरीरं त्रिणि पितृतः आस्थस्नायुमज्जातः त्रिणि मातृतश्च समुद्भूतं सर्वेभ्योऽङ्गेभ्यः समुद्भूतं अङ्गादङ्गात् संभवति प्रजायसे प्रजया

இது முதலான வசனங்கள் மாதாபித்ரு சரீரத்திற்கும் குழந்தையின் சரீரத்திற்கும் சம்பந்தத்தைச் சொல்கின்றன. இதனால் சந்ததி விருத்திக்கு விவாஹ சுத்திகாரணமென்று தெரிகிறது.

போதாயனரும் இதேமாதிரி 3 நாள் நியமங்களைச் சொல்கிறார். சாம வேதத்தில்

त्रिरात्रं क्षारलवणे दुग्धमिति वर्जयानौ अधः शयीत

என்று சொல்லியிருக்கிறது. பிரஹமசர்ய நியமத்துடனிருப்பது ரொம்பவும் அசாத்யமானபடியால் நம்முன்னோர்கள் பிரஹ்மசர்ய நியமத்திற்கு பங்கம் வந்து விடுமோ என்று பயந்து கொண்டு ஒரே வீட்டில்கூட இருக்கக்கூடாது என்று கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். சாரமான வெண்ணையை எடுத்த பாலை சாப்பிடக் கூடாது. 4வது நாளில் 4ஆஜ்யாஹுதியைச் செய்து அந்த சம்பாதத்தை உத பாத்திரத்தில் சேர்த்து கன்னிகைக்கு ஸ்நானம் செய்து வைக்கவேண்டும். 4வது நாளில் தான் அவர்களுக்கு ஔபாஸனாரம்பம்.

ஒரேநாள் விவாஹத்தில் அவர்களுக்கு எப்படி அக்னி சித்திக்குமோ தெரியவில்லை. போதாயனரும்

उभौ जायापती व्रतचारिणौ ब्रह्मचारिणौ

என்று சில நியமங்களைச் சொல்லிவிட்டு

तयोः शय्यामन्तरेण

என்று தம்பதிகளின் ஒரே படுக்கையின் நடுவில் அத்திக்கம்பை அலங்கரித்து வைக்கவேண்டும். 4வதுநாளில் தண்டத்தை எடுத்து சில காரியங்கள் செய்து உத்தாபனஞ் செய்ய வேண்டும். என்று 3 நாள் நியமத்தையும் 4வது நாள் விவாஹப் பூர்த்தியையும் சொல்கிறார். ஆபஸ்தம்பரும் त्रिरात्र என்று 3நாள் நியமத்தைச் சொல்கிறார். போதாயனரை யனுசரித்து ஆபஸ்தம்பிகளும் உதும்பர தண்டத்தை எடுத்துக் கொள்ளலாம். 4வது நாள்3வது யாமத்தில் தண்டோத்தாபனம் செய்ய வேண்டுமென்று சொல்கிறார். एकर्षिः என்றபடி சந்ததி சித்திக்கும் ஏக கோத்ரத்வசித்திக்கும்தான். இந்த நியமங்களெல்லாம் ஸூத்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரேநாள் விவாஹத்திற்கு ஸூத்ரங்களிலேயோ ஸ்மிருதிகளிலேயோ கௌணமான கல்பம் கூட இல்லை. இந்த தர்மானுஷ்டான விஷயத்தில் இதரமதஸ்தர்களுக்கு இல்லாத நிர்பந்தம் நமக்கு மட்டும் எதற்கு? காலத்தை யனுசரித்து நடக்கவேண்டாமா! மற்ற நியமங்களையெல்லாம் சரியாக நடத்துகிறார்களா? என்ற குதர்க்கங்களெல்லாம் பண்ணக்கூடாது.

स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितुमर्हसि

என்ற கீதாசார்யன் வாக்யப்படி ஸ்வ தர்மத்திலிருந்து நழுவக் கூடாது. ஒருவனைப்பார்த்து நாம் அதர்மத்தைச்செய்தால் அவனைப்போல் நாமும் நரகத்தை யடைய வேண்டியதுதான். நம் மதம், வேதம், ஸ்மிருத்யாதிகள் ப்ராசீனர்களின் கௌரவம், தர்மம் இவைகளை சிந்திக்க வேண்டாமா?

प्राणैः कण्ठगतैरपि

என்று அவ்விதமான ஆபத்திலும் தர்மத்தை மீறக்கூடாது என்று சொல்கிறார்கள் அப்பேற்பட்ட ஆபத்தொன்றும் இப்பொழுது வரவில்லை. சிரத்தையுள்ள ஆஸ்திகர்கள் இப்பொழுதும் 4நாள் விவாஹத்தைத் தான் அனுஷ்டிக்கிறார்கள். ஒரேநாளில் லௌகீக காரியங்களை யெல்லாம் செய்து

(தொடர்ச்சி 8-பக்கம் பார்க்க)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறுர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

ஒரு நாள் விவாஹம் அசாஸ்திரீயம்.

(7-வது பக்கம் தொடர்ச்சி)

விட்டு பந்துக்களை யனுப்பிவிட்டு தம்பதிகள் மட்டும் நான்கு நாள் நியமங்களை அனுஷ்த்தால் என்ன சிரமமிருக்கிறது?

कुविवाहैः—कुलान्यकुलतां यान्ति

இந்த மாதிரி விவாஹத்தால் ப்ரஷ்டனுகிருனென்று மனு சொல்கிருர். விவேகிகள் கட்டாயம வற்புறுத்தி இந்த பாபத்திலிருந்து ஜனங்களை திருப்பவேண்டும்.

"शास्त्रवित्तु चरन् पापं" என்று தெரிந்து பாபத்தை யனுஷ்டிப்பது ரொம்பவும் தவறு. குருடன் தவறி கிணற்றில் விழுந்தால் அனுதாபப்படுவார்கள். நல்லகண் உள்ளவன் விழுந்தால் பரிஹாசம் செய்வார்கள் தெரியாத்தனமாக அனுஷ்டித்தால் அவனிடம் சொல்லி பிறகாவது அதைச் செய்யாமலிருக்கும்படி செய்யவேண்டும். இந்த காலத்தில் தரும சாஸ்திரம் சொல்வதே ரொம்பவும் தர்ம சங்கடம். குருசிச்ரூஷை செய்யும் 2 சிஷ்யர்களில் ஒருவன் இருட்டில் தெரியாமல் குருவின் குழந்தையின் மேல் விறகுக்கட்டை போட்டு விட்டான் குழந்தை இறந்து விட்டது. நான் ஒருபாபமும் செய்யவில்லையே ? இந்த கஷ்டம் எப்படி வந்தது என்று குரு ஆலோசித்தார் சிசுஹத்தி ப்ராயச்சித்தம் செய்தால் தான் சிஷ்யன் அத்யயனர்ஹனுகிருன். ஆதலால் அவர்களிடம் கேட்டு ஒன்றும் தெரியாமல் தர்மராஜாவிடம் கேட்டார். அவர் மிகவும் சங்கடத்துடன் கண்ணீர் விட்டுக்கொண்டு

धर्मप्रह्लादन कुमार एनं குமாரன்

செய்யவில்லை என்று சொல்லி தர்மப்ரஹ்லாதன் தான் செய்தான் என்று சூசனையாகச் சொன்னுர்.

பாகவதத்திலும் தர்மமாகிற பசுவைப் பார்த்து பரீக்ஷித்து உன்னை யார் அடித்தது என்று கேட்டபொழுது

सूचकस्यापि हितद्भवेत्

என்றபடி சூசிப்பித்ததால் கூட பாபம் வருமென்று பயந்து கண்ணீர் விட்டுக்கொண்டே பேசாமல் நின்றது.

அதைப்பார்த்து நீதான் தர்மஸ்வரூபம் என்று நிச்சயம் செய்தார். தர்மப்ரச்நத்தில் சாஸ்திர ப்ரமாணமில்லாமல் சொன்னுல் பிரமஹத்யா தோஷம்வரும் ஜீவனத்தை உத்தேசித்து தர்மத்தை குறைக்கக்கூடாது.

செப்டம்பர் மாதத்து விமானப் போர்

பிரிட்டிஷ் நஷ்டமும் ஜெர்மன் நஷ்டமும்

(லண்டன் தந்தி.)

ஸெப்டம்பர்-மீ 17-ந்தேதி அன்று காலை வரையில் பிரிட்டிஷ் தீவுகள் மீதும் அவைகளைச் சுற்றியும் 2,176 ஜெர்மன் விமானங்கள் சுட்டு விழ்த்தப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் விமானப் படையினர் 553 விமானங்களை இழந்திருக்கின்றனர். அவைகளிலிருந்து 259 விமானிகள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

இந்த மாதம் கீழ்க்கண்டபடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஸெப்டம்பர்	உ	ஜெர்மன்	பிரிட்டிஷ்	காப்பாற்றப்பட்ட பிரிட்டிஷ் விமானிகள்
„	1	25	15	9
„	2	55	20	9
„	3	25	15	8
„	4	54	17	12
„	5	39	20	9
„	6	46	19	12
„	7	103	22	9
„	8	11	3	1
„	9	52	13	6
„	10	2	—	—
„	11	89	24	7
„	12	3	—	—
„	13	2	—	—
„	14	18	9	6
„	15	186	25	13
மொத்தம்		710	202	101

ஆதல் எல்லோரும் ஏகதின விவாஹத்தை வர்ஜித்து 4 நாள் விவாஹத்தை யனுஷ்டித்து சிரேயஸ்ஸையடையவேண்டும்.

ஆலயப்பிரவேசம் ஓர் சந்தேஹம்

அடியிற்கண்ட சந்தேகத்திற்கு ஆர்யதர்மம் பத்திரிகை மூலமாய் பதில் பிரசுரிக்க வேணுமாய்க் கோறுகிறேன்.

விஷயம்.

தீண்டாதார்களால் பிரவேசிக்கப்பட்டு அசுத்தம் அடைந்த ஆலயங்களில், அசுத்தம் ஆனபிறகு வேலை பார்க்கும் பூஜகர், அத்யயன பட்டர் முதலியவர்களுக்ரு சாஸ்திரப்பிரகாரம் தோஷம் உண்டா ?

அத்துடன் ஷெடியார்கள் வீடுகளில் சமபந்திபோஜனம் முதலியவைகள் செய்தவர்களுக்கும் தோஷம் உண்டா ?

அவ்விதம் தோஷம் ஏற்படின் அதற்கு ஆதாரம் எந்தக் கிரந்தத்தில் இருக்கிறது. ஆதார வாக்யத்தைப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுவது மிகவும் அவசியமாயிருக்கிறது.

ஆயியப்பிரவேசம் ஆன கோவிலில் வேலை பார்க்கும் பிராமணர்களின் கிரகங்களில் போஜனம் செய்தவர்களுக்கு தோஷமில்லை என்று சொல்லுகிறது.

இவ்வித சந்தேகத்தைப் பத்திரிகை மூலமாய் வெளியிட்டு அநேகர் மனதில் கொண்டிருக்கும் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டுவது மிகவும் அவசியமாயிருக்கிறது என்று காரக்குடி ஸநாதந தர்மசபை காரியதர்சி எழுதுகிருர்.

ஸர்வேஜனுஃ ஸுகினேபவந்து ! ஸகல ஜனங்களும் சுகமடையட்டும் !!

ஸர்வஹிதஸாஹித்ய மண்டலம்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

10—10—40 விஜயதசமியன்று

தார்மிக வித்யா ஸங்கம் (அறநெறிக் கல்விச்சங்கம்.)

ஆரம்பிக்கவேண்டிய ப்ரசுரங்களனுப்பி என்னையும் கௌரவ அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளவும். ஒரு அணு தபாற் தலை அனுப்பியிருக்கிறேன். இங்ஙனம் தங்கள்,

பெயர், விலாசம்:—

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S, Kalyanasundaram,